செ.வெ.எண்-43 நாள்-24.01.2019

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் தசைசிதைவு நோய் அல்லது பக்கவாதத்தால் முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்ட இரண்டுகால்களும், இரண்டுகைகளும் செயலிழந்த tetraplegic / quadriplegic) மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லா மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் (பேட்ரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள்) வழங்கப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தசைச்சிதைவு நோய் அல்லது பக்கவாதத்தால் முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்ட இரண்டு கால்களும், இரண்டு கைகளும் செயலழிந்த (tetraplegic / quadriplegic) மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லா மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் (பேட்ரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள்) பெற ஆண் மாற்றரத்திறனாளிகள் 60 வயதிற்கு மிகாமலும், பெண் மாற்றுத்திறனாளிகள் 55 வயதிற்கு மிகாமலும் இருக்கவேண்டும். கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மத்திய/மாநில அரசுகளில் பணிபுரியும் மேற்கண்ட வகையைச்சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்படும்.

எனவே, தகுதியுடையமாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை நகல், கல்வி சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம்-2, பணிபுரிபவர்களாக இருந்தால் பணிச்சான்று ஆகியவற்றுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்டஆட்சியர் அலுவலக வளாகம், அரியலூர். என்ற முகவரியில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ 30.01.2019 தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண் : 04329 - 228840 தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலெட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**